செ.வெ.எண்:34 நாள்:19.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

தென்னை மரத்திலிருந்து “நீரா பானம்” உற்பத்தி மற்றும் “நீரா” வில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள உற்பத்திசெய்ய தமிழக அரசு, தமிழ்நாடு நீரா உற்பத்திச்சட்டம்–2017 என்ற புதிய சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. இந்தச் சட்டத்தின்படி, தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்த தென்னை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தென்னை உற்பத்தி நிறுவனங்கள் “நீரா” பானம் உற்பத்தி செய்ய விரும்பும் பட்சத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

இந்த சட்டத்தின்படி பதிவு செய்த தென்னை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தென்னை உற்பத்தி நிறுவனங்கள், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள உதவி ஆணையர், கலால்துறை அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்று, உரிய கட்டணம் ரூ. 500/– செலுத்தி விண்ணபப்த்தை சமர்ப்பிக்கலாம்.

மேலும் உரிமம் கோரி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சங்கங்கள் கரூர் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) மற்றும் கரூர் கலால் துறை உதவி ஆணையரை அணுகி முழு விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.